**ஹோமியோபதி வைத்திய மன்றம் - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் ஹோமியோபதி வைத்திய மன்றம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹோமியோபதி வைத்திய மன்றத்தின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிக்கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**1.2.1** மீளாய்வாண்டின் முதல் 7 மாதங்களுக்குமான செலவினம் ரூபா 1,814,888 ஆகும். இது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. இறுதி 5 மாதங்களுக்கான செலவினம் வைத்திய மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் சேர்ந்து நின்ற செலவினமாகிய ரூபா 97,433 தீர்த்து வைக்கப்படாதிருக்கையில், மீளாய்வாண்டின் செலவினத்தைக் கணக்கில் காட்டி அதில் சேர்ந்து நின்ற செலவினத்தை ஈடுசெய்தமையால் மீளாய்வாண்டின் செலவினமும் பற்றாக்குறையும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ஆளணியினரின் சம்பளம் மற்றும் படிக் கணக்கின் கூட்டுத்தொகை ரூபா 1,590,040 ஆக இருக்க வேண்டும். எனினும், அதனை ரூபா 1,508,560 ஆகக் காண்பிக்கப்பக்கப்பட்டமையால் ஆண்டிற்கான ஆளணியினரின் சம்பளம் மற்றும்

படிகளுக்கான செலவினம் ரூபா 81,480 குறைத்துக் காட்டப்பட்டு அதன் நிமித்தம் ஆண்டிற்கான பற்றாக்குறையும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வைத்திய மன்றக் கூட்டங்களின்போது வழங்கப்பட்ட படியான ரூபா 15,000 முற்பணத்தின் கீழ் குறித்துக்கொள்ளப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினமும் பற்றாக்குறையும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் கணக்கைத் தயாரிப்பதற்காகக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 42,000 கணக்கீட்டுக் கட்டணமானது சேர்ந்து நின்ற செலவினமாகக் காட்டப்படாமையால் அதேயளவு தொகையால் ஆண்டிற்கான பற்றாக்குறையும் நடைமுறைப் பொறுப்பும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் கடன் தவணைப்பண அறவீடாக சம்பளத்திலிருந்தும் முற்பணத்திலிருந்தும் கழித்துக் கொள்ளப்பட்ட ரூபா 108,486 தவறுதலாக ஹோமியோபதி நிதியம் எனும் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் அதேயளவு தொகையால் ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஊழியர் கடன் தவணைப் பண அறவீட்டினால் பெறப்பட்ட ரூபா 72,324 காசேட்டில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதனோடு தொடர்புடைய செலவுக் குறிப்பிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) திசெம்பர் மாதத்தில் ஊழியர் சேமலாபநிதிய உதவுதொகையாக உத்தியோகத்தர்களது சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்ளப்பட்ட 8 சதவீத தொகை ரூபா 19,979 ஆகும். இது நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்படவில்லை.

(ஏ) சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்கள் வைத்திய மன்றத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இது சம்பந்தமாக நிதிசார் கூற்றுக்களில் எதிர்பாராப் பொறுப்புகள் வெளிக்கொணரப்படவில்லை.

**1.2.3 பெற வேண்டிய கணக்குகள்.**

2009 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கு ரூபா 50,000 படி ஏழு ஊழியர்களுக்கு 350,000 வழங்கப்பட்டு 12 மாதங்களில் அதனை அறவிடும் அடிப்படை கடைப்பிடிக்கப்பட்டது. அதில் ரூபா 241,684 மீதியானது 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டியிருந்தது.

**1.2.4 இணங்காணப்படாத மீதி**

2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் இனங்காணப்படாத மீதியாகிய ரூபா 7,100 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. அதனை இனங்கண்டு தக்க நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை கணக்காய்வுத் தினம் வரை மேற்கொள்ளப்படாதிருந்தது.

**1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை.**

கீழேயுள்ள விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் இன்மையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| நானாவித வருமானம் | 35,303 | பெறுவனவுப் பற்றுச் சீட்டு |
| காசு மீதி – கொமர்ஷல் வங்கி | 622,650 | வங்கியினது உறுதிப்படுத்தல் |
| காசு மீதி - இலங்கை வங்கி | 418,413 | - மேற்படி - |
| நிலையான சொத்துக்கள் (2008க்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவை) | 280,492 | பட்டோலை/நிலையான சொத்துப்பதிவேடு |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 5.1.1 மற்றும் 5.1.2 ஆம் பந்திகள் | வருடாந்த செயல் திட்டமும் கூட்டுத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை. |
| (ii) | 5.2.4 ஆம் பந்தி | மீளாய்வாண்டிலும் வரவு, செலவுத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தது. |
| (iii) | 6.5.3 ஆம் பந்தி | 2009 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை. 2011 ஜுன் 30 வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. |
| (ஆ) | 2004 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய பீஈடீ 25(1) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஹோமியோபதி வைத்திய மன்றத்தினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத தனியார் வங்கி ஒன்றில் சேமிப்புக் கணக்கொன்றைப் பேணிவந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான 5 மாத காலப்பகுதியின் போது மன்றத்தினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட விளைவு ரூபா 382,792 பற்றாக்குறையாகும். எவ்வாறாயினும், ஆண்டின் முதல் 7 மாத காலத்தில் மன்றத்திற்காக அமைச்சு செலவழித்திருந்த தொகை ரூபா 1,814,888 ஆகும். இது இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. இதற்கெதிராக முன்னைய ஆண்டின் மிகை 2,424,091 ஆகும்.

## 2.2 செயற்திறன்

---------------

(அ) 1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்படவில்லை.

(i) ஹோமியோபதி வைத்திய முறைக்கான ஆய்வு மற்றும் கல்வி என்பவற்றை வலுப்படுத்தல்

(ii) ஹோமியோபதி ஔடத உற்பத்தி, இறக்குமதி, விற்பனை, விநியோகம் என்பவற்றிற்கான பிரமாணக் குறிப்புகளைத் தயாரித்தல்.

(iii) ஹோமியோபதி வைத்திய வித்தியாலயத்தை ஆரம்பிப்பதற்கு 2008 ஆம் ஆண்டில் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து 2009 ஆம் ஆண்டில் மரத் தளபாடங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், வைத்திய வித்தியாலயத்தில் கல்விசார் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டபூர்வ வரைவைத் தயாரித்து குறித்த விடயத்தை நிறைவேற்றுவதற்கு கணக்காய்வுத் தினமான 2011 ஜுன் 1 அன்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மன்றத்தால் அதிகாரச் சட்டத்தின் 27(3)(சீ) பிரிவின் பிரகாரம் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ஏழு பிரதேசங்களில் நடாத்தப்படும் ஹோமியோபதி வைத்திய சிகிச்சை நிலையங்களில் 6 சிகிச்சை நிலையங்களில் நோயாளிகள் பங்குபற்றுதலானது 2 முதல் 47 சதவீதம் வரை குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட ரூபா 2,994,386 மொத்த கிரயத்தில் ரூபா 844,000 சட்டக்கட்டணமாகும். ஒட்டு மொத்தச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் அது 28% ஆகவிருந்தது.

## 2.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

------------------------------------------

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் குறித்த தினத்தில் மேற்கொள்ளப்படாமையால் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்ட தண்டப் பணத் தொகை ரூபா 15,765 ஆகும்.

## 2.4. பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

----------------------------------------------

ஹோமியோபதி வைத்திய வித்தியாலயத்திற்கு 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 1,199,254 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்காய்வுத் தினமான 2011 ஜுன் 01 அன்றும் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 2.5 முகாமைத்துவ நலிவு

-----------------------------

நெடுங்காலமாக இருந்து வரும் மிகப் பழைய ஹோமியோபதி மருந்து வகைகள் ஹோமியோபதி மன்றத்தில் இருப்பதுடன் 2010 திசெம்பர் 7 அன்று நடாத்தப்பட்ட பொருட் கணிப்புச் சபை அறிக்கையின்படி மருந்துகளைப் பற்றிய அறிவு உள்ள நபர் ஒருவரை உள்ளடக்கிய குழுவை நியமித்து இரசாயன உறுப்புகள் மாறுபடுவதற்கு வாய்ப்புள்ள குறித்த மருந்துகளைப் பரிசிலித்து பொருத்தமற்ற மருந்துகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டபோதும், கணக்காய்வுத் தினமான 2011 ஜுன் 1 அன்றும் அது தொடர்பாகக் குறித்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணுதல்

(ii) வருடாந்தக் கட்டணப் பதிவேட்டைப் பேணுதல்